## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 350/2023**

திரு.சங்கர் (D.W –1) **06.04.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்ன படித்துள்ளேன் என்றால் ஒன்பதாம் வகுப்பு படித்துள்ளேன். என்ன வேலை பார்த்து வருகிறேன் என்றால் என் அப்பாவுடன் சேர்ந்து நில வியாபாரம் செய்து வருகிறேன். தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். தாவா எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் செல்வராணியிடம் கடனுக்கு பணம் பெற்று இருந்தேன். என்னுடைய அப்பா கடன் பெற்றிருந்தார் அவர்கள் சொன்னதன் பெயரில் பொது அதிகாரம் ஏற்படுத்தினேன். நான் சொல்லும் விவரங்கள் அனைத்தும் தவறு என்றால் சரியல்ல.

2. வா.சா.ஆ–1 பதிவு ஏற்பட்ட கிரைய ஆவணத்தில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் ஆமாம். கிரைய ஒப்பந்த ஆவணம் ஏற்பட்ட போது தாவா சொத்திற்குரிய அசல் உரிமை ஆவனும் வாதியிடம் ஒப்படைத்து விட்டேன் என்றால் தவறு. செல்வராணியிடம் கொடுத்தேன். செல்வராணியிடம் அசல் உரிமை ஆவணத்தை கொடுத்தேன் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல அவரிடம் தான் கொடுத்தேன். தாவா சொத்தை கிரையம் செய்து கொள்ள வாதி விருப்பத்துடன் தயாராக இருப்பதாக என்னிடம் தெரிவித்தார் என்றால் தவறு அவ்வாறு என்னிடம் கேட்கவில்லை. செல்வராணி தான் கடன் கொடுத்ததை வட்டியுடன் திருப்பி கேட்டார்.

3. தவறாக சாட்சியம் அளிக்கிறேன் தாவா சொத்தை நான் கிரயம் செய்து கொடுக்கும்படி கேட்டு மறுத்ததால் வாதி வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினார் என்றால் தவறு. அறிவிப்பு வரவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பு வாங்க மறுத்ததால் திரும்பி வந்துவிட்டது என்றால் தவறு. வழக்கறிஞர் அறிவிப்பே வரவில்லை. தாவா கிரைய ஒப்பந்த ஆவணம் கடனுக்காக ஏற்பட்டது என்பதற்காக காவல் நிலையத்தில் புகாரோ வழக்கோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றால் சரி. வட்டி கொடுத்து வந்ததால் நடவடிக்கை எடுக்கவில்லை.

4. என்னுடைய தகப்பனார் கடன் பெற்று இருந்தார் என்பதற்கு ஏதேனும் ஆவணங்கள் முதல் விசாரணையுடன் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு வாதி விருப்பத்துடன் தயாராக இருந்தும் நான் தாவா சொத்தை கிரயம் செய்ய மறுத்ததால் வாதி தாவாவை தாக்கல் செய்துள்ளார் என்றால் தவறு. என்னிடம் எப்போதும் அவர் கேட்கவில்லை. தாவா கிரைய ஒப்பந்த ஆவணம் என்னுடைய தகப்பனார் கடன் பெற்றதற்காக ஏற்படுத்தப்பட்டது என்பதை குறித்து கிரைய ஒப்பந்த ஆவணம் செல்லாது என்று எந்த நடவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்றால் தவறு. வேறு நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது. வழக்கு விபரங்கள் முதல் விசாரணையிலோ எதிர் வழக்குரையிலோ

சொல்லவில்லை என்றால் தவறு. தாவா வாதி கோரியப்படி தீர்ப்பளிக்க வேண்டும் என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாஎன்ன படித்துள்ளேன் என்றால்ட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2026.04.06 18:34:47 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.